ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 968/6 – 1997 මාර්තු 26 වැනි බදාදා– 1997.03.26

968/6 ஆம் இலக்கம் – 1997 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 26 ஆந் திகதி புதன்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) — பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

ச. வ. பி. 21/ 78 IV

**1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டம்**
**22 ஆம் பிரிவின் கீழான கட்டளை**

1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 22 ஆம் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு கல்வி, உயர்கல்வி அமைச்சர் ரிச்சர்ட் பத்திரன ஆகிய நான், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் கலந்தாலோசனையுடன் இக்கட்டளை மூலம் —

(அ) 1997, ஏப்பிறல் 01 ஆந் தேதியிலிருந்து இலங்கை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் வவுனியா வளாகத்தைத் தாபிக்கின்றேன்;

(ஆ) அத்தகைய வளாகத்திற்கு இலங்கை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் வவுனியா வளாகம் என்ற பெயரையும் மகுடத்தையும் குறித்தொதுக்குகின்றேன் ;

(இ) அத்தகைய வளாகத்தின் அமைவிடம் வவுனியா மாவட்டத்தில இருத்தல் வேண்டுமெனக் குறித்துரைக்கின்றேன் ;

(ஈ) வியாபாரக் கற்கைகள் மற்றும் பிரயோக விஞ்ஞானம் பற்றிய பீடங்களை அத்தகைய வளாகத்துக்குக் குறித்தொதுக்குகின்றேன் ; அத்துடன்

(உ) இதற்கான அட்டவணையின் I ஆம் நிரையில் தரப்பட்டுள்ள அத்தகைய வளாகத்தின் பீடங்கள் அவ்வட்டவணையின் II ஆம் நிரையிலுள்ள நேரொத்த பதிவில் தரப்பட்டுள்ள கற்கைத் துறைகளைக் கொண்டிருத்தல் வேண்டுமெனக் குறித்துரைக்கின்றேன்.

கல்வி, உயர்கல்வி அமைச்சர்.

கொழும்பு,
1997. மாச்சு 24.

### அட்டவணை

| நிரை I | நிரை II |
|---|---|
| வியாபாரக் கற்கைகள் பீடம் | நிதி மற்றும் கணக்கியல் துறை பொருளியல் மற்றும் முகாமைத் துறை |
| பிரயோக விஞ்ஞான பீடம் | பௌதிக விஞ்ஞானத் துறை<br>உயிரியல் விஞ்ஞானத் துறை |

04-183

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.